

திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. உடன் பிறந்த மூத்த சகோதரரும், கொத்தகோட்டை ஊராட்சி, செக்குமேடு கிராமம் மு.கிளை கழக செயலாளருமான க.சண்முகம் மறைவிற்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி நேரில் சென்று மாலை வைத்து அஞ்சலி செலுத்தி அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இதில் அ.செ.வில்வநாதன் எம்.எல்.ஏ., எஸ்.தாமோதிரன், வி.ஜி.அன்பு, கே.முருகேசன், சு.அரசு, டி.சந்திரசேகர், எஸ்.ராஜா மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடன் இருந்தார்கள்.



சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம், அரிசிப்பாளையம், K.K.V கந்தசாமி செட்டியார் ஆயிர வைசியர் திருமண மண்டபத்தில் நேற்று (22.10.2025) நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

### சேலம் மாநகராட்சி அரிசிப்பாளையத்தில்

# சூரமங்கலம் மண்டலத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

சேலம், அக். 23 -

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலம் அரிசிப்பாளையம் கந்தசாமி செட்டியார் ஆயிர வைசியர் திருமண மண்டபத்தில் நேற்று (22.10.2025) நடைபெற்ற வரும் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி சேலம் மாநகராட்சி ஆராமச்சந்திரன்ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின் திட்டம் 15.07.2005 அன்று தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து சேலம் மாவட்டத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா,ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 18 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 256 முகாம்களும் என மொத்தம் 43 சிறப்பு முகாம்கள் திட்டமிடப்பட்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தீர்வுகள் காணப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள்.

சேலம் மாவட்டத்தில் 15.7.2025 முதல் 17.10.2005 வரை நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 225826 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இது தவிர கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோர விண்ணப்பமாக மொத்தம் 13184 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக நேற்று (22.10.2025) சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலம் வார்டு 27 க்குட்பட்ட பகுதிகளுக்கு அரிசிப்பாளையம் KKV கந்தசாமி செட்டியார் ஆயிர வைசியர் திருமண மண்டபத்திலும் தரசிங்கபுரம் நகராட்சி வார்டு 2 0 க்கு ட்பட்ட பகுதிகளுக்கு ஆத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், மல்லூர் பேரூராட்சி 4 , 15 க்குட்பட்ட பகுதிகளுக்கு மல்லூர் அகர மஹால் திருமண மண்டபத்திலும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி தவபட்டி பகுதிக்கு காவேரி கிராஸ் சமுதாய கூடத்திலும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம் நடுவனேரி பகுதிக்கு நடுவனேரி பி.எஸ்.சண்முகம் சுந்தராம்பாள் திருமண மண்டபத்திலும் ஓமலூர் ஊராட்சி ஒன்றியம். எஸ்.செட்டிபட்டி பகுதிக்கு சரக்கபிள்ளையூர் சுபம் திருமண மண்டபத்திலும் 'உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெற்று வருகிறது.

அந்தவகையில் நேற்று (22.10.2025) சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலம் அரிசிப்பாளையம் KKV கந்தசாமி செட்டியார் ஆயிர வைசியர் திருமண மண்டபத்தில் நடைபெற்று வரும் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு முகாமில் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வசதிகள், இருக்கை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இன்றைய தினம் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாயில் வழங்கிய மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு சொத்து வரி பெயர் மாற்றம் , புதிய சொத்து வரி காலியிட நில வரி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்கள்.

இந்திகழ்வின் போது சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், சூரமங்கலம் உதவி ஆணையர் ரகுராஜ் சேலம் வட்டாட்சியர் பார்த்தசாரதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு களின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



திருப்பத்தூர் நகராட்சியில் நகராட்சிக்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவிபெறும் பகுதியில் பயிலும் 3000 மாணவர்களுக்கு காலை உணவு தயாரிக்கும் பணிகளை கொட்டும் மழையிலும் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி சமையல் கூடத்திற்கு நேரில் சென்று உணவின் தரத்தை ஆய்வு செய்து சரியான நேரத்தில் அனைத்து பள்ளிகளுக்கும் காலை உணவு சென்றடைய வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதில் திருப்பத்தூர் ஆணையர் சாந்தி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் எஸ்.அரசு, மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# புழல் ஏரியில் இருந்து உபரிநீர் திறப்பு!

## நீர் வளத் துறை அதிகாரிகள் தகவல்!

புழல், அக். 23 -

வடகிழக்கு பருவமழை தொடங்கிய நிலையில் புழல் ஏரியில் இருந்து கடந்த 15ம்தேதி முதல் உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்தநிலையில், தொடர் கனமழை காரணமாக ஏரிக்கு வரும் நீர்வரத்து அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் புழல் ஏரியில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, புழல் ஏரியில் இருந்து காலையில் 300 கன அடியாக திறக்கப்பட்டு வந்த உபரிநீர் தற்போது 500 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. புழல் ஏரிக்கு 36 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று முன்தினம் 72 கன அடியாக அதிகரித்துள்ளது. 3300 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட புழல் ஏரியில் நீர் இருப்பு 2732 மில்லியன் கனஅடியாக உள்ளது. 21.2 அடி உயரம் கொண்ட புழல் ஏரியில் 18.61 அடி உயரத்திற்கு தண்ணீர் நிரம்பியுள்ளது.

புழல் ஏரியில் இருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் சுமார் 13.5 கி.மீ கால்வாய் வழியே எண்ணூர் கடலில் சென்று கலக்கிறது. நாரவாரிகுப்பம், வடகரை, கிராண்ட்லைன், சாமியார் மடம், தண்டலகழனி, பாபாநகர், வடபெரும்பாக்க்ம, வடகரை, மணலி மற்றும் கொசப்பூர் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட ஊர்கள் வழியாக உபரிநீர் செல்ல உள்ளதால் கால்வாய் ஓரங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தி உள்ளார்.

நீர்வரத்துக்கு ஏற்ப ஏரியில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீர் அளவு பராமரிக்கப்படும் என நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பவானிசாகர் அணையில் உபரிநீர் திறப்பு!

பவானி, அக். 23 -

ஈரோடு மாவட்டத்தில் கோபி, சத்தி, கவுந்தப்பாடி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பெய்த கனமழையால் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த ஒரு வார காலமாக பவானி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் இரவு நேரங்களில் கனமழை பெய்து வருகிறது.

அதனால், தடுப்பணைகள் ஆங்காங்கே நிரம்பி உபரி நீர் வெளியேறி பவானி ஆற்றில் கலந்து வருகிறது.

பவானிசாகர் அணையும் நிரம்பியதால் நேற்று முன்தினம் இரவு முதல் உபரி நீர் ஆற்றில் திறக்கப்பட்டது. இதனால் பவானி காலிங்கராயன் அணைக்கு 5,400 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று முன்தினம் காலை 6 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது.

தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்த நிலையில் இரவு விநாடிக்கு 14 ஆயிரம் கன அடியாக உயர்ந்தது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து 6,800 கன அடியாக உள்ளது.

பவானிசாகர் அணையிலிருந்து திறக்கப்பட்ட உபரி நீருடன், மழை நீரும் சேர்ந்து வருவதால் நீர்வரத்து மேலும் உயரும் என கருதப்படுகிறது.

பவானி காலிங்கராயன் அணைக்கட்டிலிருந்து உபரி நீர் காவிரி ஆற்றில் சென்று கலந்து வருகிறது. நீர்வரத்து நிலவரத்தை நீர்வளத் துறை உதவிப் பொறியாளர் குமார் மற்றும் அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.



மதுரை மாநகராட்சி 46வது வார்டு காமராஜபுரம் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பண்டிகையை முன்னிட்டு மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., கழக பொதுக்குழு உறுப்பினரும் மாமன்ற உறுப்பினருமான பி.விஜயலட்சுமி பாண்டியன் ஏற்பாட்டில் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் மூவேந்திரன், ஏ.எம்.முருகன் மற்றும் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.ஆர். கோவிந்தன்

### அக்டோபர் 23 (2021)



தனது இளமைக் காலத்திலிருந்தே தீவிரமாக கழகப் பணியில் ஈடுபட்டு வந்தவர்.

சென்னை, அண்ணா நகர் பகுதியில் மாவட்ட பிரதிநிதி, வட்டச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

2006ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கங்காதீஸ்வரர் கோவில் அறங்காவலர், புரசைவாக்கம் கூட்டுறவு வங்கி இயக்குநர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.

சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களை முன்னெடுத்தி நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு எட்டு முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தேனி ஆஜிப்கான் தந்தை

# அப்பாஸ் மந்திரி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

தேனி, அக் . 23 -

தேனி வடக்கு மாவட்ட இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஆஜிப் கான் தந்தை அப்பாஸ் மந்திரி இயற்கை எய்தினார் என்பதை அறிந்து பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்புகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக



உடன்பிறப்புகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆசிரியர் வெ.கோவிந்தன்

### அக்டோபர் 23 (2021)



ஆசிரியராகப் பணியாற்றி வந்த இவர், கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, தனது ஆசிரியர் பணியை துறந்து, 1977ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

பேர்ணாம்பட்டு நகர பொறுப்பாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட துணைச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை பேர்ணம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினர், நகர வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.

சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**